Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 81

National Tamil Daily தேசிய தினசரி

(3 5 65)

விசுவாவசு சித்திரை 21 முஹர்ரம் பிறை 1 திங்கட்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |





கள்ளக்கடத்தல் சட்டவிரோத குடியேற்றம்

# தடுப்பு நடவடிக்கை

## இராணுவம், பொலிஸ், சுங்கபகுதி அதிகாரிகள் ஆராய்ந்தனர்

### கிராமத் தொண்டர்களை திரட்டமுடிவு

மாவிட்டபுரம், ஞாயிறு

கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவற்றைத் தடை செய்யும் வழிவகைகளைக் காணும் முகமாக உயர்தர மகாநாடொன்று அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்றது. இந்த மகாநாட்டில் இராணுவம், பொலிஸ், சுங்கப்பகுதி அதிகாரிகள் கலந்துகொண்டனர். பல ஆலோசனைகளுடன் சிலதீர்மானங்களும் இம்மகாநாட்டில் மேற்கொள்ளபட்டன.

கடந்த இரண்டு மாதகாலமாக வடமராட்சி கரையோரப் பகுதியில் கள்ளக்கடத்தல் அதிகமாக நடைபெறுவதைத் தடை செய்ய எப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ள லாம் என்பதை ஆராயும் பொருட்டே இந்த மகாநாடு கூட்டப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட காரியாதிகாரி ஜே. டி. ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த லெப்டினண்ட் எச் லைவாசிர், வல்வெட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஜி. எச். ஹரஸ்கம, யாழ்ப்பாணம் சுங்க பகுதியைச் சேர்ந்த திரு ரி. பவனராஜா, பருத்தித்துறை சுங்கப்பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். டி. அமரசிங்க, பொலிஸ் சார்ஜன்ட் பி. முருகேசு, கிராமசேவகர்கள் சி. கே. தாமோதரம்பிள்ளை, எஸ். கட்டேசபிள்ளை, எஸ். சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு ஆர்னல்ட் தெரிவிக்கையில், வடமராட்சியின் கிழக்குக் கரையோரப்பகுதியில் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகிறதென்றும் கடந்த சில காலமாக, கற்கோவளம், வல்லிபுரம், குடத்தனை ஆகிய இடங்களை கள்ளக்கடத்தல்காரர்கள் தங்களது புதிய இடங்களாகத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றும் கூறினர்.

இந்தப்பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் ஏழைகள் என்றும் கள்ளக்கடத்தல்காரர்களின் தூண்டுதல்களால் இவர்கள் பல குற்றங்களுக்குள்ளாக முடியும் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

கிராமத் தொண்டர்களைத் திரட்டி, பொலிசாரின் உதவியுடன் இப்படியான நடவடிக்கைகளை முறியடிக்க கிராமசேவகர்கள் முன்வர வேண்டும் என்று இம்மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. முன்னர் குற்றங்கள் புரியாத பத்து தொண்டர்கள் கற்கோவளத்தில் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கள்ளக்கடத்தல், சட்டவிரோதக்குடியேற்றம் ஆகியவற்றைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இலங்கை – போலந்து

## உறவுகள் விருத்திபெறும்

### ஸ்தானிகர் பேச்சு

குரும்பசிட்டி, ஞாயிறு

போலந்து–இலங்கை உறவுகள் பாரம்பரியம் நிறைந்தவை அல்ல. இந்த இரு நாடுகளுக்கிடையே முதன்முறையாக 1955-ம் ஆண்டில் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. பின்னர் 1957-ம் ஆண்டில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. அன்றைய தினத்திலிருந்து பொருளாதார கலாச்சார உறவுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இலங்கையை ஒரு தொழில்முறை நாடாக மாற்றும் திட்டத்திற்கு கைகொடுக்கும் உதவி ஒப்பந்த மொன்று 1963-ம் ஆண்டு சித்திரை மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் போலந்து அரசாங்கம் கம்பகாவில் ஒரு கனரக சிறு உபகரண உற்பத்திச் சாலையை நிறுவ முன்வந்துள்ளது, இவ்வாறு போலந்து ஸ்தானிகர் திரு ஜே சப்சாக்கி விக்ஸ, குரும்பசிட்டி உதய தாரகை சனசமூக நிலையத் தினரின் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். உள்ளூராட்சி–தனி ஆணையாளர் திரு எஸ். சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழா குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச்சங்கத் திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

இங்கு குறிப்பிட்ட கடனுதவித் திட்டங்களைவிட போலந்து, சீனி, உருளைக்கிழங்கு, சீமெந்து, கடுதாசி, புடவை, ரயர், இரசாயனப் பொருட்கள் ஆகிய பலவகையான பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்கின்றது. இவற்றுக்கும் பதிலாக ரப்பர், தேயிலை, தேங்காய்எண்ணெய் கயிறு போன்ற பொருட்களை இலங்கையிலிருந்து பெற்றுக் கொள்கிறது. இந்த ஏற்றுமதி இறக்குமதியெல்லாம் பெரும்பாலும் போலந்துதேச கப்பல்களிலே செய்யப்படுகின்றது. இவ்வாறு 1964-ம் ஆண்டில் மட்டும் இந்நாடுகளிடையே பண்டமாற்று வியாபாரம் ஆறு கோடி ரூபாவுக்கு நடைபெற்றது. இருநாடுகளுக்கும் லாபம் தரக்கூடிய இந்த வர்த்தகம் மேலும் வளர்ச்சியடைய சகல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

## பஸ்சேவை சீர்கேடு

### பிரயாணிகள் கஷ்டம்

மீசாலை, ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து அடிக்கடி இ. போ. ச. பஸ் வண்டிகள் சாவகச்சேரியில் வந்து திரும்பி பிரயாணிகளின்றி வெறும் வண்டிகளாகவே யாழ்ப்பாணம் செல்கின்றன. சாவகச்சேரிக்கு அருகாமையிலுள்ள சாலை கொடிகாமம் ஆகிய இடங்களில் பல மணித்தியாலம் காத்திருக்கும் பஸ்வண்டியைப் பிடிக்க முடியாமல் [illegible] பிரயாணிகள், நோயாளிகள், விவசாயிகள், வியாபாரிகள் மிகவும் கஷ்டமடைகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் பஸ்களைக் கொடிகாமம்வரை செல்ல அனுமதிக்கப்பட்டால் சாவகச்சேரிக்கு அப்பாலுள்ள பிரயாணிகளின் கஷ்டங்களும் நீங்குவதுடன் இ. போ. சபைக்கும் அதிக லாபம் கிடைக்கும்.

இச்சீர்கேடான பஸ்சேவையால் சில தினங்களில் பிரயாணிகள் சில முக்கிய வினைகளை நேரத்திற்குச் சென்று கவனிக்கமுடியாமல் இருக்கிறதாம்.

உணவுப் பிரச்சனை

## குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்

### வவுனியா எம். பி. யோசனை

வவுனியா, ஞாயிறு

"எமது நாட்டில் பல ஏக்கர் நெற்செய்கைக்கும், மேட்டுநிலச் செய்கைக்கும் உரிய நிலம் காடாக வவுனியாவில் உள்ளது. இத்தவைய நிலத்தை நாம் இன்னு வைத்துக்கொண்டு மக்களின் பஞ்சத்துக்கும் வேலையில்லா பிரச்னைக்கும் இடம்கொடுக்கக்கூடாது."

இவ்வாறு அண்மையில் வவுனியா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் வவுனியா நகரசபைத் தலைவரும், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரத்தின் தலைமையில் வவுனியா அரசாங்க அதிபரைப் பேட்டிகண்டபொழுது கேட்டுள்ளார்கள்.

இனிமேலும் தாமதமின்றி நாட்டு மக்களின் துன்பத்தை நீக்க உடனடியாகப் பல குடியேற்றத் திட்டங்களை தொடக்கி அதன்மூலம் நமது நாட்டுக்குத் தேவையான உணவுப்பயிர்களை உண்டாக்கி நாட்டின் பஞ்சத்தையும் வேலையில்லாப் பிரச்சினையையும் அறவே நீக்கவேண்டுமென வவுனியா எம். பி. திரு ரி. சிவசிதம்பரம் தெளிவாக எடுத்துக்காட்டினர்.

நாட்டில் இன்று நிலவிவரும் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வுகண்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் நமக்கு உணவுப்பொருட்களை நாம் இந்த இடத்தில் உற்பத்திசெய்யமுடியுமென்றும் அரசாங்க அதிபரிடமும் இத்தூதுகோஷ்டியினர் எடுத்துக்கூறினர்.

வவுனியாவில் கடந்த சூறாவளியினால் பாதிக்கப்பட்ட குடியேற்றத்திட்ட வீடுகள் இதுவரை காலமும் திருத்தாமல் மக்கள் அடையும் கஷ்டத்தைப் பற்றியும் அவ்வீதிகளில் விழுந்த மரங்கள் இன்னும் அகற்றப்படவில்லையென்றும் பாதிக்கப்பட்ட வீதிகளைத் திருத்த உடனடியாகப் புனரமைப்புத் திட்டத்தைக் கையாளவேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. வவுனியா அரசாங்க அதிபர் தன்னால் முடியுமானவற்றைக் கவனித்து ஆவனசெய்வதாகக் கூறியதாகவும் தெரியவருகிறது.

## காங்கிரஸ் மகாநாடு இம்மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் இருபதாவது வருடாந்த மகாநாடு இம்மாதம் 15-ம் 16-ம் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது. இம்மகாநாட்டிற்கான ஒழுங்குகளை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி செய்து வருகிறது.

அம்மகாநாட்டின் முதல் நாள், வாலிப முன்னணி மகாநாடும் இரண்டாம் நாள் தமிழ் காங்கிரஸ் மகாநாடும் நடைபெறுமென்றும், இரு நாட்களும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் எனத்தெரியவருகிறது.

இலங்கைதொழிலாளர் சமூக தலைவர் திரு. எஸ். தொண்டமான், காரியதரிசி திரு. சி. வி. அண்ணாமலை ஆகியோரும் தென் இந்தியாவிலிருந்து இரு முக்கிய பேச்சாளர்களும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று தெரியவருகிறது.

மட்டக்களப்பு, திருக்கோணமலை, கொழும்பு, மலைநாடு ஆகிய இடங்களிலிருந்து வரும் ஆதரவாளர்கள், தங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது, வடமாகாணத்திலுள்ள எல்லாத் தொகுதிகளிலிருந்தும் இருபது சயிக்கிள் ஊர்வலங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டில், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், தமிழ் காங்கிரஸ் தலைவராகவும், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், உப-தலைவராகவும் திரு எஸ். பாஸ்கரன், தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணி தலைவராகவும் தெரிவு செய்யப்படுவார்களென்றும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற குழுத் தலைவராக இருப்பாரென்றும் தெரியவருகிறது.

## சுழிபுரம் கோஷ்டி வெற்றியீட்டியது

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விளையாட்டுக் கோஷ்டிக்கும் மானிப்பாய் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். மானிப்பாயில்நடைபெற்ற இப்போட்டியில் சுழிபுரம் கோஷ்டியினர் 38 ஓட்டங்களை மேலதிகமாக எடுத்து வெற்றி பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறர் மீது குற்றம் கூறி அவர்களுக்கு நியாயத் தீர்ப்பு அளிப்பது நமது வேலையல்ல. நம்மையேநாம் அலசி ஆராய்ந்து தீர்ப்பளித்துக் கொள்ள வேண்டும். நம்மிடம் ஒரு சிறிய குற்றமும் இருக்கும் வரை, அது இருந்தும் நமது உறவினரும் நண்பரும் நம்மைக் கைவிடாதிருக்க விரும்பும்வரை, மற்றவர்களின் விஷயங்களில் குறுக்கிட நமக்கு உரிமை கிடையாது.

— மகாத்மா

ஈழநாடு
ஈழ நாடு
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
... ... 126.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை 21 உ (3 5-65)

## காடைத்தனம் வேண்டாம்

'காடைத்தனம்' எந்த இடத்தில் எந்தச் சமயத்தில் எந்த உருவத்தில் தோன்றினாலும் அதை முளையிலேயே கிள்ளியெறிந்து விடவேண்டும்.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது தமிழ்மறை. இதுவே தமிழர்பண்பு; மனிதப்பண்பும் அதுதான். கருத்து வேற்றுமை இல்லாதவர்களும் கொள்கை வேற்றுமை இல்லாதவர்களும் இருக்கமுடியாது; கருத்துவேற்றுமை இல்லாதவர் உலகில் இருக்கவே கூடாது என்று எதிர்பார்க்கவும் முடியாது. ஒருவருடைய கருத்தை மற்றவர் ஏற்றுத்தானாகவேண்டும் என எதிர்பார்க்கவும் கூடாது. ஒருவருடைய கருத்தும் அவரது நடவடிக்கையும் மற்றவருக்குப் பிடிக்கவில்லையானால் அவர் தனது கருத்தை எடுத்துச் சொல்லலாம். அவருக்கு அந்தச் சுதந்திரம் உண்டு. இதற்குமாறாக ஒருவர் தனது கருத்தை வெளியிடுவதையோ, தனது நோக்கத்தைச் செயலில்காட்டுவதையோ பலாத்காரச்செயல் மூலம் தடுக்கமுனைவது தமிழர் பண்புமல்ல; மனிதப்பண்புமல்ல.

நமதுநாடு ஒரு ஜனநாயக நாடு. இங்கு சட்டத்துக்குட்பட்ட முறையில் வீதியில் செல்லவும் கூட்டத்தில் பேசவும் எவருக்கும் உரிமையுண்டு.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாண நகரின் மத்தியில் மேதினக் கொண்டாட்டத்தை யொட்டி நடைபெற்ற ஊர்வலம் ஒன்றிலும் பொதுக்கூட்டமொன்றிலும் கலந்துகொண்டவர்களில் நால்வர் கல்வீச்சுக்கு இலக்காகிக் காயமடைந்த துரதிர்ஷ்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதேபோன்று கொழும்பிலும் பலாத்காரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வேறுபட்ட கொள்கைகளையுடைய இருதரப்பினருக் கிடையில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. தவறுயார்மீது என்பதைப் பற்றி நாம் இங்கு ஆராய விரும்பவில்லை. ஆனால் யார்

# இன்று இஸ்லாமிய புத்தாண்டு ஆரம்பம்

—இப்ராஹீம் தைபீர்—

இன்று இஸ்லாமிய பெருமக்களின் புதுவருட பிறப்பு தினமாகும். புதுவருடத்தின் முதல் மாதம் முஹர்ரம் ஆகும். எம்பெருமானார் நபிநாயகம் (ஸல்) மக்காவை விட்டும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். இதிலிருந்து ஹிஜ்ரி ஆண்டு கணிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையில் வளம் பெற்றிருப்போருக்கும் வறுமைப்பட்டுள்ள மக்களுக்கும், கடன்பட்டோருக்கும் உதவிசெய்து தான்பெற்ற இன்பத்தால் மகிழ்ச்சியடையும் திருநாள் இது!

முஹர்ரம் மாதம் நமக்குத் தன்னடக்கம் பற்றியும் சுய விசாரணை பற்றியும் பல படிப்பினைகளைக் கற்றுத் தந்திருக்கின்றது. இறைவனுக்குக் கீழ்ப்படிவதோடு மனிதனுக்கு அன்பு காட்டும் அறவாழ்வுக் கொள்கையை வளர்க்கவும் அது தூண்டுகின்றது. நம் கடைப்பிடித்தொழுகிய கட்டுப்பாட்டைத் தனிப்பட்ட தன்மையின்றி சமுதாய வாழ்வில் விழுங் கடைப்பிடித்தேயாக வேண்டுமென்பதையும் அது எமக்கு ஞாபகமூட்டியிருக்கின்றது. இறைவன் இவ்வுலகில் மக்களையும் படைத்து ஒரு மார்க்கத்தையும் அருளினான். இறைவன் உங்களுக்கு இலகுவையே விரும்புகின்றான் நீங்கள் கஷ்டப்படுவதை அவன் விரும்பவில்லை (2:185) என்னும் வேதவாக்கின்படி, தூய இஸ்லாம் மிக மிக இலகுவானதென்பதும், அம்மார்க்கம் கற்பிக்கும் வழிமுறைகளான ஐங்கால கடமைகள் இறைவன் பாதையில் ஒவ்வொரு மனிதனையும் நேர்வழியடையச்செய்கின்றது.

இப்புனித புத்தாண்டில் முஹர்ரம் மாதம் ஆரம்பமாதமாகும். நல்லவை செய்து நல்லவர்களுடன் வாழவைக்கும் தன்மையது. அவ்வாறான புத்தாண்டின் புனித மாதம் உலகில் தன் மாண்பைக் காட்டி, உலகோரை மாண்புடையராக்கி மாசுமறுவற்ற நல்ல உன்னத முடையவராக மக்களை மாற்றியமைக்கும் திருநாளாகும்.

இன்பம் பொங்கும் இன்பத் திருநாளில் உலகமாந்தர் அனைவரும் புத்தாடைபூண்டு பூரிப்புடன் பள்ளிநோக்கி இறைவனை வணங்குவோமாக! மேலும் இம்மாதத்தில் கர்பலா யுத்தம் நடைபெற்றது இமாம் ஹஸன் ஹுஸைன் திருபாலர்கள் கர்பலா யுத்தத்தில் ஷஹீத்தான மாதமாகும். இறைவன பாதையில் இஸ்லாத்திற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த மாதம் தான் முஹர்ரம் மாதமாகும். புத்தாண்டிலே ஒவ்வொரு முஸ்லிம்களின் உள்ளத்திலும் தியாக உணர்ச்சி இருத்தல் வேண்டும்.

புனிதமான புத்தாண்டிலே புத்துயிர் அளிக்கும் இச்சுப தினத்தில் புத்துணர்ச்சி பெறவும், இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து பெருமானாரின் (ஸல்) போதனையின்படி உண்மைமுஸ்லிமாக வாழ இறைவன் இன்னருள்புரிவானாக! ஆமீன்

(ஷஹீத்) இறைவன் பாதையில் போர் செய்து பகைவர்களால் வெட்டுண்டு உயிர் துறந்தவர்கள் இறந்தவர்கள் என்று கூறாதீர்கள். அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்கள்.

(குர் ஆன்)

இச்சம்பவத்துக்குப் பொறுப்பாக இருந்தாலும் அது அவர்கள் பின்பற்றும் கட்சியின் வளர்ச்சிக்கோ, கொள்கையின் வளர்ச்சிக்கோ நிச்சயம் உதவி புரியாது. கூட்டத்தில்குழப்பம் செய்வதும் ஊர்வலத்தைக் குழப்புவதும் அப்பட்டமான காடைத்தனமேயொழிய வேறில்லை. காடைத்தனத்துக்கு யார் பொறுப்பாக இருந்தாலும்அதைக்கண்டித்து அதற்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்கவேண்டியது பொதுமக்களினதும்பொறுப்பு வாய்ந்த தலைவர்களினதும் தலையாய கடமை.

இச்சம்பவத்தை வைத்துக் கொண்டு இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் வசைபாடத் தொடங்கக்கூடும். அன்றைய கூட்டங்களிலேயே இது ஆரம்பமாகி விட்டது. இது நிலைமையை மோசமாக்கி நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியது. இச்சம்பவத்தைப் பெரிதுபடுத்தாமல் தங்கள் ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்த வேண்டியது இருதரப்புத் தலைவர்களின் பொறுப்பு. நிலைமை மோசமாகாமல் உடனடியாகத் தலையிட்டு அமைதியை நிலைநாட்டிய யாழ்ப்பாணம் பொலிசாரைப் பாராட்டவேண்டும். இதே சமயம் அரசியல் கட்சிகளின் ஊர்வலங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் அனுமதி வழங்கும்போது சிறிது முன்னெச்சரிக்கையுடன் பரிசீலனை செய்யவேண்டியது அவசியம் என்பதையும் பொலிசாருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# "வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்கவழிவகுக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் நகர மண்டப மைதானத்தில் சென்ற சனிக்கிழமை மாலை நடைபெற்ற மொழி வழித்தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

இன்றைய அரசியல் மாற்றத்தினை எழுந்துள்ள புதிய சூழ்நிலை எமது பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டதென்றுமனமயக்கத்தில் ஆழ்ந்துவிடாமல் தொடர்ந்து எமதுஉரிமைப் போராட்டத்தை நடத்திச் செல்லவும் உரிமையைப் பேணிக்காக்கவும் தமிழ் பேசும் தொழிலாளர்களையும் மக்களையும் ஒரே அணியின் கீழ் திரளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்நாட்டில் உண்மையான "சோஷலிசம்" மலர்வதற்கும் மக்கள் ஆட்சித் தத்துவம் நிலைத்து நிற்பதற்கு நாட்டில் உள்ள சகல இனத்தவர்களது மொழி, கலை, பண்பாடு, சமயம் ஆகிய இவற்றிற்கு ஒத்த உரிமையும் சுதந்திரமும் சமத்துவமும் வழங்கப்படுவது அத்தியாவசியமாதலின் அதற்கான நடவடிக்கைகளை உறுதியுடன் மேற்கொள்ளும்படி "தேசிய அரசாங்கத்தை"க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் படித்த வாலிபர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்.

## இசைவிழா நடத்த முடிவு

மீசாலை, ஞாயிறு

மீசாலை தமிழ் இசைச்சங்கத்தின் பொதுக்கூட்டம் மீசாலை தெற்கு கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் தலைவர் திரு. கு. சிவசுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் நடைபெற்றபொழுது ஜூலை மாதம் 9-ம், 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் இசைவிழா ஒன்று மீசாலையில் நடாத்த வேண்டுமென சங்கீதபூஷணம் திரு. கே. குமாரசாமியினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தென்மராட்சியிலுள்ள இசை அறிஞர்களை கௌரவிப்பதெனவும் மிருதங்க [illegible] கச்சேரி நடத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## "நெசவுநிலையம் வேண்டும்"

வவுனியா, ஞாயிறு

"புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல் கிராமங்களில் உள்ள வாலிபர்கள் பலர் படித்துவிட்டு வேலையின்றி இருக்கிறார்கள், பல மங்கையர்கள் திறமையிருந்தும் இங்கு வாழ்ந்தும் அவர்களுக்கு ஏற்ற தொழிற்பயிற்சி நிலையங்கள் இங்கு கிடையாது. ஆகவே இங்கு ஒரு நெசவு நிலையத்தையும் கைப்பணிச் சாலையையும் திறந்து பெருளாதார அபிவிருத்திக்கு வழிசெய்துவிடுமாறு கேட்கின்றோம்" இவ்வாறு கலவெட்டித்திடல் காந்தி சேவாசங்கச் செயலாளர் செல்வி பரமேஸ்வரி கனகசபை சங்கச் சார்பில் கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு கா. பொ. இரத்தினத்திற்குச் சமர்ப்பித்த மகஜரொன்றில் கேட்டுள்ளார்.

இச்சங்கத் தலைவர் திரு. ஆர். சி. சுப்பிரமணியம் எடுத்துக்கூறியதாவது: "இப்பிரதேசத்தில் பருத்திச்செய்கைக்கேற்ற நிலமுண்டு. கைவினையும் பூமியுமுண்டு. அதற்கேற்ற வாய்ப்பும் இங்கிருக்கிறது. கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கலவெட்டித்திடல் காந்திசேவா சங்க உறுப்பினர்களுக்குத் தையல்நிலையங்களைத் தான் விரைவில் அக்கிராமத்தில் திறப்பதாகக் கூறியுள்ளார். உருத்திரபுரத்திலுள்ள நிலையம் போன்ற ஒன்றை விரைவில் எங்கள் மத்தியில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்."

## வீடு எரிந்து சாம்பலானது

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு காலையடியைச் சேர்ந்த சி. சுப்பிரமணியம் என்பவருடைய வீடு எரிந்து பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. என மதிப்பிடப்பட்டுள்ளது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

தொழிற்சாலை" என்று எழுதக்கூடாது. அப்படி எழுதினால் பிச்சைக்காரத் தொழிற்சாலை என்றாகிவிடும்" என்று கவிஞர் கண்ணதாசன் தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற புத்தகவெளியீட்டு விழாவொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். நமது அரசகருமமொழித்திணைக்களத்தாருக்கும் இலங்கை வானொலி தமிழ்ப் பகுதியினருக்கும் இந்த எச்சரிக்கை பயன்படவேண்டும்.

— ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

"ஒழிக கோஷம்ஒழிக" என்று ஆசிரியர் 'கல்கி' ஒரு சமயம் கல்கியில் தலையங்கம் தீட்டியிருந்தார். நேற்று முன்தினம் யாழ்ப்பாண வீதிகளில் சென்ற மேதின ஊர்வலங்களில் 'ஒழிக' கோஷங்கள் 'முழங்கியபோது' 'கல்கி'யின் தலையங்கம்தான நினைவுக்கு வந்தது. 'ஒழிக' கோஷங்கள் என்றுதான் ஒழியுமோ?

* * *

யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் மூன்று சாராரின் மேதினக் கூட்டங்கள் நடைபெற்றன. மூன்று பிரிவாக ஊர்வலங்களும் நடைபெற்றன. மூன்று ஊர்வலங்களையும் பார்த்து மூன்று கூட்டங்களுக்கும் சென்று திரும்பிய அன்பர் ஒருவர் தமக்கு மூளைகுழம்பிவிட்டதாகக்கூறி என்னையும் குழப்புகிறார்.

முதலாளியார்? தொழிலாளியார்? வகுப்புவாதிகள் யார்? என்று ஒன்றுமே புரியாமலிருக்கிறது என்கிறார் அவர். மூன்று கூட்டங்களில் பேசியவர்களும் தாங்கள்தான் தொழிலாளிகளென்றும் தங்களே தொழிலாளரின் உண்மையான நண்பர்களென்றும் கூறுகின்றனர். அவர்கள் தங்களை மட்டும் சொன்னால் பரவாயில்லை. மற்றவர்கள் தொழிலாளரின் விரோதிகளென்றும் அவர்களெல்லாம் முதலாளித்துவ அடிவருடிகளென்றும் கூறுகின்றனர். இவர்களில் யார்தொழிலாளர்? யார்உண்மையான தொழிலாள நண்பர்கள் என்று அவர் கேட்கிறார், என்னத்தைச்சொல்ல!

* * *

வகுப்புவாதிகள் யார்? மூன்று கூட்டத்தில் பேசியவர்களும் ஒருவரையொருவர் வகுப்புவாதிகள் என்கின்றனர். அதுமட்டுமா! தாங்களதான் தமிழர்களின் உண்மையான நண்பர்களென்றும் அவர்கள் சொல்கின்றனர். தமிழரின் உண்மையான நண்பர் யார்! விரோதியார்! தமிழர் என்று ஏன் தனியாகப் பிரித்து அவர்களின் நண்பர்யார் என்று தனியாகக் கேட்க வேண்டும். அப்படிச் சொல்வதும் வகுப்புவாதம் தானே! என்கிறார் மற்றோரன்பர்.

* * *

முந்தா நாள் மாலை பெரிய கடையிலுள்ள ஒரு 'பேக்கரி'யில் பாண்வாங்கச்சென்றவருக்கு குட்டித் தேர்தல் ஒட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேதினக் கூட்டங்களைப் பற்றியோ ஊர்வலங்களைப்பற்றியோ அவர் கவலைப்படவில்லை. வீட்டில் பிள்ளைகளின் வயிற்றுப் பசியைத் தணிப்பதற்காகபாண் வாங்கச் சென்றவர் கற்கள் வந்து தனக்கருகில் விழுந்த போதுதான் கவலைப்பட்டார். மேதினத்தைப்பற்றியல்ல! கற்களைப்பற்றி தனதுமண்டையையும் கற்கள்பதம்பார்த்து விடுமோவென்று அஞ்சிய அவர் திரும்பி ஓட்டம் பிடித்தார். அவரிடமிருந்த சில சில்லறைகளும் தவறிவிட்டன. "இந்தஇடத்திலேயும் கூட்டம்வைக்க எதற்கு அனுமதி வழங்கினார்களோ" என்று சலிப்புடன் கூறிக்கொண்டார் அவர்.

* * *

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது சின்னம்மை நோய் பல இடங்களிலும் காணப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வெள்ளம் தலைக்குமேல் போன பிறகுதான் "ஆபத்து" "ஆபத்து" என்று குரல் கொடுப்பது நமக்கே யுரிய பழக்கம்!

* * *

ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுதும்போது எச்சரிக்கை தேவை. ரப்பர் தொழிற்சாலை என்று இருந்தால் "இரப்பர்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு உதவியாக சீன இராணுவ நிபுணர்கள்

## மே.வங்காளம், கி.பாக்.எல்லையில் காணப்படுவதாக இந்தியா அறிவிப்பு

### பாகிஸ்தானின் தாக்குதல் ஒரு நீண்டகாலத் திட்டமாம்

புதுடில்லி, மே. 2

**நேற்று நண்பகலுக்குப் பின்னர் நெருக்கடி நிறைந்த கட்ச் பகுதியில் முழு அமைதி நிலவுவதாக கடைசியாக இங்கு கிடைத்த செய்திகள் கூறுகின்றன. ஆனால் மேற்கு வங்காள கிழக்குப் பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் துருப்புகள் பெருமளவில் குவிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. கிழக்குப்பாகிஸ்தான் எல்லையோரமாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு உதவியாக சீன இராணுவ அதிகாரிகள் காணப்படுவதாக செய்திகள் கூறுகின்றன. இந்தச் செய்திகளை இந்திய வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன:**

#### சண்டை விபரம்

அண்மையில் கட்ச்-ரன் பகுதியில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் எல்லைச்சண்டைகள் குறித்து இப்பொழுது தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இந்தச் சண்டை இந்திய தரைப்படைகளுக்கும் பாகிஸ்தான் டாங்கி படையினருக்குமிடையே ஏற்பட்டதொன்றாகும் என்று அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் படையினர் அமெரிக்க டாங்கிகள் உட்பட 90 டாங்கிகளின் உதவியுடன் தாக்குதல்கள் நடத்தியிருந்தனராம். பியர்பேட்டியும் 84 வது முனையிலும்தான் இருதரப்பினருக்குமிடையே சண்டை முதலில் ஆரம்பமானது.

#### அமெரிக்க டாங்கிகளை பார்வையிட்டனர்

இந்தத் தாக்குதல்களின் போது இந்தியவீரர்கள் பெருமளவில் தாக்குதல் நடத்தி, ஒரு பகுதியில் பின்வாங்கினர். சிறிய பிரிவைக் கொண்ட இந்திய படையினரை பெருமளவில் பாகிஸ்தான் துருப்புகள் தாக்கியபொழுதுதான் இச்சம்பவம் நிகழ்ந்தது. பின்வாங்குவதற்கு முன்னர் பாகிஸ்தான் வசமுள்ள 10 டாங்கிகளை இந்தியத் துருப்புகள் நாசப்படுத்தியதாகவும், வெடிமருந்து குவிப்பொன்றை அழித்துவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. சேதப்படுத்தப்பட்ட, நாசப்படுத்தப்பட்ட அமெரிக்க டாங்கிகள் ஐ. நா. பார்வையாளர்களுக்கு காட்டப்பட்டன.

#### விமானங்கள் பறக்கின்றன

பாகிஸ்தான் பிராந்தியம் மீது இந்திய விமானங்கள் பறக்ககூடாதென்று உத்தரவிடப்பட்டுள்ளன ஆனால் இந்திய எல்லைகள் மீது பாகிஸ்தான் விமானங்கள் பறப்பது தொடர்ந்து நிகழ்ந்துவருகின்றன. எல்லைகளைப் படம்பிடிப்பதிலும் மற்றும் சில "தீவிர" நடவடிக்கைகளிலும் பாகிஸ்தான் விமானங்கள் ஈடுபட்டு வருவதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

#### "நீண்டகால திட்டம்"

கட்ச்—ரன் பகுதியில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதல் நீண்ட காலமாக ஆயத்தஞ் செய்யப்பட்டு நடத்தப்பட்ட தந்திரமான திட்டம் என்று இந்திய உயர் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

#### சர்தார் நிலையில் . . .

மற்றுமொரு பகுதியான சர்தார் நிலையில் இந்திய மத்திய ரிசர்வ் பொலிஸார்மீது பாகிஸ்தான் துருப்புகள் தாக்கி பின்னர் பீரங்கிகளின் மூலம் தாக்குதல் நடத்தினரென்றும் இதனைச் சமாளிக்க முடியாது, இந்தியப் பொலிஸார் விலகிச்செல்ல தீர்மானித்தனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

#### துருப்புகளுக்கு கஷ்டமான பகுதி

கட்ச் நிலப்பரப்பு துருப்புகளுக்கு அதிக கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது. ரன் பகுதி, மணல் தரையானது. இங்கு குடிநீர் எடுப்பதே மிகவும் கஷ்டமாகும்.

#### ராஜஸ்தானில் படை குவிகிறது

ராஜஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் படைகள் பெருமளவில் குவிக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது. காஷ்மீரில் மூன்று பகுதிகளில் பாகிஸ்தான் படைகள் யுத்த நிறுத்தக்கோட்டை மீறி சிறிய இயந்திரத் துப்பாக்கிகளினால் சுட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குவங்காளம்-கிழக்குப்பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் படைகள் முன் எப்பொழுதும் இல்லாத மாதிரி பெருமளவில் குவிக்கப்படுவதாக இந்தியச் செய்திகள் கூறுகின்றன.

---

# "ஆக்கிரமிப்பு நோக்கமிருந்திருந்தால் நாம் கட்ச் பகுதியை தேர்ந்திருக்கமாட்டோம் முழுப்போர் நிகழுவதை இந்தியா தவிர்க்கவேண்டும்"

### அயூப்கானின் கடும் எச்சரிக்கை

ராவல்பிண்டி, மே 2

**"பாகிஸ்தானே ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதாக இந்தியா குற்றம் சுமத்துகின்றது. ஆனால் நாங்கள் ஆக்கிரமிப்பு நடத்தி, தாக்குதல்கள் தொடுத்து எல்லையைப் பிடிக்க வேண்டுமென்றால் கட்ச் பகுதியைத் தேர்ந்தெடுத்திருக்கத் தேவையில்லை. வேறு ஒரு "நல்ல" இடத்தைத் தெரிவு செய்திருப்போம்" என்று பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் நேற்றிரவு நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.**

கட்ச்-ரன் பகுதியில் நடைபெற்ற சண்டைகளைத் தொடர்ந்து பாகிஸ்தான்மீது இந்தியா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் நேற்றிரவு பதிலளித்தார்.

இந்திய குற்றச்சாட்டுக்களை மறுத்துப்பேசிய அவர், இந்தியாதான் ஆக்கிரமிப்பு நடத்தியதென்றும் இந்தியா தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் வெறும் கட்டுக்கதை என்றும் தெரிவித்துள்ளார்.

"கட்ச்-ரன் பகுதியில் எமது துருப்புகள் எந்தவித ஆக்கிரமிப்பு வேலைகளிலும் ஈடுபடவில்லை. எமது துருப்புகள் எமது எல்லைகளுக்குள் தான் இருக்கின்றார்கள்" என்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் தெரிவித்தார்.

"இந்தச்சண்டையில் பாகிஸ்தான் துருப்புகள் அசாதாரண முறையில் தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றார்கள் இதற்காக அவர்களை நான் மிகவும் பாராட்டுகின்றேன். பாகிஸ்தான் மக்கள் அவர்களுக்கு என்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்" என்றும் அதிபர் அயூப்கான் [illegible]

"பாகிஸ்தான் [illegible]புச் செய்திருக்கிறது என்ற இந்தியக் குற்றச்சாட்டுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை" என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

"கட்ச்-ரன் எல்லைச் சண்டையை நிறுத்தி இதற்குத் தீர்வுகாண பாகிஸ்தான் விரும்புகின்றது. சமாதானப் பேச்சுக்கள் மூலம் இதனைத் தீர்த்துவைக்க முடியும். யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமானால் அப்பகுதியிலிருந்து இருநாடுகளுடைய படைகளும் முதலில் வெளியேற வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.

[illegible] கூடிய முறையில் நடந்திருக்கிறது. முழுப்போர் ஒன்று மூளக்கூடியதை இந்தியா தான் தவிர்க்க வேண்டும், காஷ்மீர் சுயநிர்ணய போராட்டத்துக்குப் பாகிஸ்தான் எப்பொழுதும் ஆதரவளிக்கும் என்றும் பாகிஸ்தான் அதிபர் அயூபகான் எச்சரிக்கை விடுத்தார்.

---

# தெ.வியட்னாமில் 22 வியட்காங் நிலைகள் நாசப்படுத்தப்பட்டன

### அமெரிக்காவின் மற்றுமொரு நடவடிக்கை

சைகோன், மே. 2

தென்வியட்னாமிலுள்ள வியட்காங் நிலைகள்மீது அமெரிக்க ஜெட்விமானங்கள் நேற்று பெருமளவில் தாக்குதல்களை நடத்தினர் இந்தத் தாக்குதல்களின் போது 22 வியட்காங் நிலைகள் நாசப்படுத்தப்பட்டன என்றும் 28 வியட்காங் நிலைகள் சேதப்படுத்தப்பட்டன என்றும் சைகோன் வானொலி இன்று அறிவித்தது.

சைகோனுக்கு சில மைல் தூரத்தில் தென்வியட்னாம் அரசாங்கபடைகளுக்கும் வியட்காங் கொரில்லாக்களுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 84 வியட்காங் கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர். அரசாங்க படைகளுக்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டதென்று பின்னர்வந்த செய்திகள் கூறுகின்றன.

---

# "துங்குவை சந்திக்க நான் தயாரில்லை!"

### அதிபர் சுகர்னோ அறிவிப்பு

ஜாகர்த்தா, மே 2

மலேசியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மானை டோக்கியோவில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தமுடியாது என்று இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ அறிவித்துள்ளார்.

ஜாகர்த்தாவில் நேற்றுநடைபெற்ற மே தினக கூட்டத்தில் சுகர்னோ சொற்பொழிவாற்றினார்.

"மலேசியப் பிரச்சினை சம்பந்தமாக துங்குஅப்துல்ரஹ்மானை டோக்கியோவில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்பு அடுத்த மாதம் நிகழும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நான் அடுத்த மாதம் டோக்கியோவில் துங்குவை சந்தித்து பேச தயாரில்லை" என்று அதிபர் சுகர்னோ தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு நிகழுமுன்னர் ஜப்பானில் உச்சிமகாநாடு ஒன்று நடைபெறவேண்டும் என்று கூறிய அவர், மலேசியாவை நசுக்கும் கொள்கையை இந்தோனேஷியா இன்னும் கைவிடவில்லை என்று எச்சரித்தார்.

---

# சிங்கப்பூரில் நெருக்கடி: 270 பேர் கைது!

### முக்கிய இடங்களில் இராணுவத்தினர் காவல்

சிங்கப்பூர், மே 2

சிங்கப்பூரில் நேற்று பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே கைகலப்புகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து 270 பேர் கைதுசெய்யப்பட்டனர். சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இராணுவத்தினர் பல இடங்களிலும் காவல்புரிந்து வருகின்றனர்.

சிங்கப்பூரில் சில தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதைக் கண்டித்தே நேற்று இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி தற்பொழுது நிலைமை கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பதாகவும் நெருக்கடி தணிந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# "வகுப்புவாதத்துக்கு இடமளிக்கக்கூடாது"

### சண்முகதாசன், பாலா தம்பு கண்டனம்

கொழும்பு, ஞாயிறு

வகுப்புவாத அடிப்படையில் தொழிலாளர்களைப் பிரிப்பது வெட்கப்பட வேண்டிய விஷயமென்றும் வகுப்புவாதக் கூச்சல் ஒழிந்தால் அது தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமென்றும், டி மெல் பார்க்கில் நேற்று மாலை நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் திரு. பாலாதம்பு பேசும் போது கூறினார்.

திரு. பாலாதம்பு தொடர்ந்து பேசும்போது இலங்கையில் தொழிலாளர் இயக்கத்திற்காக சிந்திய இரத்தத்திலும் பார்க்க வகுப்புவாத கூச்சலுக்கு அதிக இரத்தம் சிந்தப்பட்டுள்ளதாகவும் தற்பொழுதுள்ள வகுப்புவாதக் கூச்சல்களுக்கும் இனத்துவேஷங்களுக்கும் தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எந்த முறையில் கண்டனம் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்றும் கூறினார்

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட மேதினக் கூட்டத்தில் திரு. என். சண்முகதாசன் பேசும் போது, இடதுசாரிக் கட்சிகளின் வகுப்புவாத கூச்சலை தொழிலாளர்கள் கண்டிக்க வேண்டுமென்றும் யூ. என். பி.யை முறியடிக்க எதிர்க்கட்சியினர் வகுப்புவாத கூச்சலை குறுக்குவழியாக பாவிப்பது முறையல்லவென்றும் கூறினார்.

இடதுசாரிக்கட்சிகள் இனத்துவேஷத்தைக் கிளப்ப முற்படுவது வெட்கப்பட வேண்டிய விஷயமென்றும் தொழிலாளர்கள் வகுப்பு வித்தியாசமின்றி ஒன்றுபட வேண்டுமென்றும் அவர்மேலும் பேசும் போது கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்த விபரத்தை கேட்பது வகுப்புவாதமா?

## கூட்டணி மேதின விழாவில் ஜி. எச். ரத்னவீரா

யாழ்ப்பாணம், ஞாயிறு "பிரதமர் டட்லி சேனநாயக்காவும் செல்வநாயகமும் செய்துகொண்ட ஒப்பந்தம் அவர்களின் தனிப்பட்ட சொந்த விஷயத்தைப் பொறுத்ததல்ல. அதனை நாடு அறிய வேண்டும் நாட்டு மக்கள் அறிய வேண்டும். அந்த ஒப்பந்தம் இந்த நாட்டு கொள்கைகளைப் பாதிக்கக் கூடியதா? என்பதை அறியவேண்டும். இதைப்பற்றி நாங்கள் கேட்டால் எங்களை வகுப்புவாதிகள் என்கிறார்கள். இவற்றைப்பற்றிக் கேட்க இந்நாட்டு மக்களாகிய எங்களுக்கு உரிமை இல்லையா?"

யாழ்ப்பாணம் பழைய பஸ் நிலையத்தில் நேற்று மாலை நடைபெற்ற சமசமாஜ—கம்யூனிஸ்ட் கூட்டு மே தினவிழாவில் திரு ஏச் ஜி. எச். ரத்னவீரா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார். இக்கூட்டம் யாழ்ப்பாண மாநகர சபை அங்கத்தவர் திரு. எஸ். தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. ரத்னவீரா தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:- வடபகுதியில் சமஷ்டிக் கட்சியினர் பொறுமையாக இருக்கும்படி கூறுகின்றனர். தென்னிலங்கையில், ஐக்கிய தேசிய கட்சியினர் பொறுமையாக இருக்கும்படி கூறுகின்றனர். ஒப்பந்தத்தை வெளியிட இவர்கள் ஏன் பயப்படுகின்றனர். உண்மை இதுதான். இந்நாட்டிலுள்ள பிற்போக்குவாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்காகவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தினால் சிங்களமக்களுக்கோ தமிழ் மக்களுக்கோ எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

உலக நாடெங்கும் தொழிலாளர்கள் மேதினத்தைக் கொண்டாடுகிறார்கள் தொழிலாளர்கள் உண்மையான தேசிய தினம் இந்த மேதினம் தான். இலங்கையில் தொழிலாளர்கள் மட்டுமின்றி அவர்களைச் சுரண்டும் முதலாளிகளும் மே தினத்தைக் கொண்டாடுகிறார்கள் இதைப் பார்த்து உலகத்திலுள்ள மற்றநாட்டு மக்கள் சிரிப்பார்கள்

### 1960 ல் ஏன் அமைக்கவில்லை

ரத்தினவீரா தொடர்ந்து கூறியதாவது:- தனது கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காததால்தான் தேசிய அரசாங்கம் அமைக்க முடிந்ததென்றும், இது தனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமென்றும் பிரதமர் டட்லி கூறியுள்ளார். அப்படியானால் 60-ம் ஆண்டு மார்ச் தேர்தலுக்குப் பின் டட்லி பிரதமராக வந்தபொழுது தமிழரசுக் கட்சியினரை சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைத்திருக்கலாமே! ஐக்கிய தேசியக்கட்சிக்கு 75 ஸ்தானங்கள் கிடைத்திருந்தால் டட்லி சேனநாயக்கா தேசிய அரசாங்கத்தைப் பற்றியோ தமிழ் மக்களைப் பற்றியோ சிந்தித்திருப்பாரா? தற்பொழுது டட்லி தேசிய அரசாங்கம் அமைத்துள்ளது, தனது கட்சிக்கு போதிய பெரும்பான்மை பலத்தை பெறுவதற்காகவே. தமிழர்களின் ஆதரவின்றி அரசாங்கம் அமைக்கமுடியும் என்ற நிலை வந்ததும், தேசிய அரசாங்கம் மறைந்து யு. என். பி. அரசாங்கம் உதயமாகும்.

தமிழர்களுக்கு உரிமை கொடுக்க ராஜரத்தினம் விடுவாரா? வகுப்புவாதியான சி. பி. டி' சில்வா விடுவாரா? டட்லிக்கும், செல்வநாயகத்திற்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் சட்டப்படி செய்யப்பட்ட திருமணமா? அல்லது இரகசியமாக, இனத்தவர்களுக்கும் அயலவர்களுக்கும் தெரியாமல் செய்யப்பட்ட திருமணமா? ஏற்பாடுகள் என்ன? சீதனம் என்ன? என்று சொந்தக்காரர்கள் அறிந்துகொள்ள உரிமையில்லையா? அவர்களுக்கு ஆவல் இருக்காதா! இதே போல் தான் ஒப்பந்தம்பற்றி இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த நாங்கள் அறிந்துகொள்ள உரிமையில்லையா? அறிந்து கொள்ளமுயல்வது வகுப்புவாதமா? முதலாளிகளின் நலன்களை பாதுகாக்கவே டட்லியும், செல்வநாயகமும் ஒப்பந்தம் செய்துகொண்டார்களே தவிர நாட்டு மக்களுக்காக வல்ல.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். தங்கராசா பேசும்போது கூறியதாவது: தமிழ்க்காங்கிரஸ் அன்று ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளித்துவிட்டதாக கூறி அதிலிருந்து வெளியேறி புதிய கட்சி உருவாக்கிய தமிழரசு கட்சியினர், இன்று அதே ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வர உதவியுள்ளார்களே தமிழ் காங்கிரஸ் அன்றுவிட்ட தவறை மீண்டும் இன்று தமிழரசுக்கட்சியினர்விட்டிருக்கின்றனர் முதலாளித்துவ கும்பலான ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சி பீடமேற உதவியளித்த தமிழரசுக்கட்சி இன்று தொழிலாளர் தினமாகிய மேதினத்தை கொண்டாடுவதற்கு என்ன உரிமை இருக்கின்றது. சமசமாஜகட்சியினர் சுதந்திரகட்சியுடன் 14 அம்சத்திட்டத்துடன் தான் ஒன்று சேர்ந்து அரசாங்கம் அமைத்தார்கள். தமிழரசுகட்சியினர் என்ன திட்டத்துடன் ஒன்று சேர்ந்தார்கள்? ஜனநாயகத்தை பாதுகாக்கவே டட்லியை ஆதரித்ததாக தமிழரசு கட்சியினர் கூறுகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சர்வாதிகாரத்தை விரும்புகிறதென்று தேர்தல் கூட்டங்களில் தமிழரசுக் கட்சியினர் கூறினார்களா? சுதந்திரக்கட்சியை ஆதரிக்கமாட்டோமென்று ஒரு தேர்தல் கூட்டத்திலாவது தமிழரசுக்கட்சியினர் கூறினார்களா? தமிழ்மக்களின் உரிமைகளை தரமுன்வரும் கட்சியை ஆதரிப்போம் என்று தான் தேர்தல் கூட்டங்களில தமிழரசு கட்சியினர் கூறினார்கள் முன்னைய அரசாங்கம் தமிழர்களின் உரிமையைத்தர மறுத்ததா? கூட்டு அரசாங்கம் தமிழர்களின் உரிமைகளைத்தர முன்வரவில்லையா? எதற்காக தமிழரசுகட்சியினர் ஐக்கிய தேசியகட்சியை ஆதரித்தனர்? உரிமைகள் கிடைத்துவிட்டதா? இனிமேலும் கிடைக்கப்போகின்றதா? ஒப்பந்தத்தைப்பற்றி வெளியிட எதற்காக தயங்குகின்றார்கள்?

ஏ. விஸவநாதன் பேசும்போது கூறியதாவது: தமிழ் மக்களின் மனதை வேறுபாதையில் திருப்புவதற்காகவே தமிழரசுக்கட்சி மேதினத்தைக் கொண்டாடி வருகின்றார்கள். முதலாளித்துவத்திற்கு ஆதரவளித்துவிட்டு, தமிழரசார் மேதினம் கொண்டாடுகின்றார்கள், தாங்களும் தொழிலாளர்களின் பாதுகாவலர்கள் என்று காட்டுவதற்காகவே இப்படி செய்கின்றார்கள்,

திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசும்போது கூறியதாவது: 1944-ம் ஆண்டு தனிச் சிங்களத்தை அரசாங்க மொழியாக்கவேண்டுமென்று தீர்மானம கொண்டுவந்தது ஐக்கிய தேசியக்கட்சி சிங்கக் கொடியை திணித்து தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்டு சிங்களவர்களை குடியேற்றி, பத்து லட்சம் இந்தியத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்தது ஐக்கிய தேசியக்கட்சி அதே ஐக்கிய தேசியக்கடசிக்கு, தமிழர் உரிமைக்கு போராடுவதாகக் கூறும் தமிழரசுக்கட்சியினர் ஆதரவளித்துள்ளனர் தமிழரசுக்கட்சியும், தமிழ்க்காங்கிரசும் அரசாங்கத்தில் சேர்ந்துவிட்டதால், இலங்கையிலுள்ள முழுத் தமிழ் மக்களும் தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கிறார்கள் என்பது அர்த்தமா? தனிப்பட்ட சில சலுகைகளுக்காக தொண்டமானும், அண்மையில் அரசாங்கத்தை ஆதரித்தால் மலைநாட்டுத் தமிழர்கள் எல்லோரும் அரசாங்கத்தை ஆதரிக்கிறார்கள் என்று அர்த்தமா?

### உரிமை அளிக்கும் நேரம் வீழ்ந்தது

பி. நாகலிங்கம் பேசும்போது கூறியதாவது:

தமிழ்மொழிக்கு உரிமையளித்து தமிழ்மக்களுக்கு வாழ்வளிக்கும் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரும் சமயம் கூட்டரசாங்கம் வீழ்ந்துவிட்டது. சமசமாஜக்கட்சித் தலைவர் தமிழ்மக்களின் விஷயத்தில் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்ளவில்லையா? கூட்டு அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க முன் வந்ததையறிந்துகொண்ட பின், தமிழரசுக்கட்சியினர் ஐக்கியதேசியக்கட்சியை ஆதரித்துள்ளனர்.

திரு. மோதிலால்நேரு, திரு. டொமினிக்ஜீவா ஆகியோரும் பேசினர்.

# "புரட்சிகர போராட்டத்தின் மூலமே உரிமை பெறலாம்"

## மேதினக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள் "இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திடையே பெரும் பிளவை உண்டுபண்ணக்கூடிய சகல பிற்போக்குச் சக்திகளும் ஒன்றுதிரண்டு ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் இக்கட்டத்தில் அதனை உடைத்தெறிவதற்குச் சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றுதிரண்டு தொழிலாளர்களுக்காகப் போராடவேண்டும்' என்று திரு. வி. ஏ. கந்தசாமி இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் மேதினவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு டாக்டர் சு. வே. சீனிவாசகம் தலைமை வகித்தார், யாழ்ப்பாணம் முட்டாசுக்கடைச் சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் யாழ்ப்பாணத்திலுள்ள பல வீதிகள் வழியாகச் சென்று கூட்டம் நடக்குமிடத்தை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் வாலிபர்கள் இராணுவத்தினர் போன்று உடையணிந்து அணிவகுத்துச் சென்றனர்.

திரு. கந்தசாமி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"உலகத்திலுள்ள சகல நாடுகளும் வித்தியாசமில்லாது கொண்டாடும் விழா மேதின விழாதான். அமெரிக்காவில் சிக்காகோ நகரில் தினம் பதினைந்து மணி நேரங்களுக்கு மேலாகத் தொழிலாளர்கள் உழைத்து உழைத்து முதலாளித்துவ வர்க்கத்தால் சுரண்டப்பட்டு வந்தார்கள். இந்த முதலாளித்து வர்க்கத்துக்கு எதிராகத் தொழிலாளர்கள் அன்று ஒன்றுகூடிப் போராட்டம் நடத்தினார்கள். இரதம் சிந்தினார்கள் தூக்குக்கயிற்றை முத்தமிட்டார்கள். முடிவில் விடுதலைபெற்றார்கள், அன்று அவர்கள் சிந்திய இரத்தத்தின் விளைவுதான் இன்று நாடெங்கும் கொண்டாடப்படும் மேதின விழா."

இரத்த வெள்ளம் பாயப் பெற்ற தியாகத்தின் விளைவாகப்பெற்றெடுத்த இத்தொழிலாளர்களது புனிதமான விழாவில் செங்கொடியைத் தவிர்த்த ஏனைய கொடிகள் பறக்குமானால் அது தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக இழைக்கப்படும் பெரும் அநீதியென்றும் சர்வஜன சக்திகள் ஒன்றுபட்டக்கூடிய ஒரு புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் தான் இந்நாட்டில் தொழிலாளர்கள் வாழ்வுபெற முடியுமென்றும் திரு. கந்தசாமி தெரிவித்தார்,

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் செய்து கொண்டபொழுது அது கிழித்தெறியப்படவேண்டும் என்று பாதயாத்திரை செய்த ஐக்கிய தேசியக்கட்சி தமிழ்மக்களது பிரச்னையைத் தீர்த்துவைக்குமென்று நாம் எப்படி எதிர்பார்க்கலாமென்றும் திரு. கந்தசாமி கேட்டார்,


இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் உபதலைவர் திரு. ஏ. ஆர். எட்மண்ட் பேசுகையில் "தொழிலாளர் நலனைப் பாதுகாக்கவேண்டிய இடதுசாரித் தலைவர்கள் சிலர் அவர்களை மறந்து பதவிவேட்கைக்காகப் பிற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்துகொண்டிருப்பது தொழிலாள வர்க்கத்திடையே பெரும் பிளவை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது" என்றார். டாக்டர் என். எம். பெரேரா அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினார். தொழிலாளர்களுக்குத் துரோகம் பல இழைத்த கட்சி அதென்றும் கூறினார், ஆனால் அதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் அவர் அணிவகுத்து சிறபதோடல்லாமல் தொழிலாளர்களுக்காக உழைப்பவர்கள் தாங்கள் தானென்றும் கூறுகிறார்" என்று திரு. எட்மண்ட் கூறினார்.

தொழிலாளர்களிடையே ஐக்கியமும் ஒற்றுமையும் உருவாக்கக்கூடிய விதத்தில் ஒரு புதிய இடதுசாரிகள் தலைமையில் தொழிலாளர்கள் சகலரும் ஒன்றுதிரண்டு சகல பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் தயாராக இருக்கவேண்டுமென்றும் திரு. எட்மண்ட் மேலும் பேசுகையில் சொன்னார்.

திரு. எம். கே. அந்தனிசில் பேசுகையில் காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை

(5-ம் பக்கம் பார்க்க)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
லக்ஷ்மி (ரத்னபுரி) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
விஜிதா (ஹட்டன்) நீவொலி (நுவரேலியா) ஜூப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

REGAL – JAFFNA
NOW SHOWING
Jack Palance
in
REVAK THE REBEL
(Technicolor)
Next Change:- TARAS BULBA

ராதா குரு தைலம்




240, வியாதிகளுக்கு மகா சஞ்சீவி
தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி
வயிற்றுவலி, புல்வலி, விஷக்கடி
இருமல், நெஞ்சுச்சளி, வாதம்
வலிப்பு, ஜன்னி, வாய்வுப்பிடிப்புகள் முதலிய சகல
வியாதிகளுக்கும் சிறந்தது.
எஸ். சுப்பிரமணியம் அன் கோ
60, செட்டியார் தெரு, கொழும்பு.
53, கே. கே. எஸ். ரோட், (போன்: 541) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன ரீதியில் தொழிலாளர் ஒன்றுபடுவது அவசியம்"

## மொழிவழித்தொழிற்சங்க கூட்டத்தில் கோப்பாய் எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'இன்றைய சூழ்நிலையில் இன ரீதியில் தொழிலாளர்கள் ஒன்றுபடுவது அவசியம். தனிப்பட்ட ஒரு விஷயத்துக்காக அல்லாது ஒரு இனத்துக்காகவும் தொழிலாளர்கள் உழைப்பது இதனால் சாத்தியமாகிறது'.

இவ்வாறு மொழிவழி தொழிற்சங்கங்களினது கூட்டில் மேதினவிழாவில் பேசுகையில் கோப்பாய் எம், பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. ப. வித்தியானந்தசர்மா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:

தொழிலாளர்களுக்குள்ளேயே 'துரோகிகள்' என்ற பட்டத்தை எந்த ஒரு சாராரும் பெற்றுவிடக்கூடாது. இதனை கருத்திற்கொண்டு தொழிற்சங்கங்கள் நடந்து கொள்வது நன்மை தரக்கூடியதாக இருக்கும்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் பேசுகையில், தொழிலாளிக்கும் ஓய்வு வேலை என்றும் அவனும் மனைவி, மக்களோடு ஓய்வெடுத்துக்கொள்ள வழியிருக்கவேண்டுமென்றும் கூறினார், தொழிலாளி - முதலாளிக்கிடையே நல் உறவு இருப்பதாலேயே இவை சாத்தியமாகுமென்றும் அவர் கூறினார். எந்த ஒரு தொழிற்சங்கமும் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடுவதால் பலியாகப் போகிறவர்கள் தொழிலாளர்கள் தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், தொழிலாளர்கள் தீய சக்திகளுக்கு தம்மை அடிமையாக்கி விடக்கூடாது என்றும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க காரியதரிசி திரு. தங்கவேலு பேசுகையில், கடந்த கால அனுபவத்தைக் கொண்டே மொழிவழித் தொழிற்சங்கங்களை ஸ்தாபிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்களெல்லாம் ஒன்றுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

திருமதி ம. அமிர்தலிங்கம் பேசுகையில், ஒரு தொழிலாளி மற்றத்தொழிலாளிக்கு பாதகமாக நடந்து கொள்வதோ ஒரு தொழிலாளி மற்றத்தொழிலாளி மீது தாக்குவதோ

தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு உதவாது. இதற்குப்பதிலாக வீழ்ச்சிக்குத்தான் வழி வகுத்துவிடும். இவ்விதநிலை இப்போதும் நிலவுவது பற்றி மிக்கவேதனையடைய வேண்டியிருக்கிறது என்றார். தோல்வியுற்றுள்ள இடதுசாரியினர் இப்போது வகுப்பு துவேஷத்தைக்கிளப்பிவிட முயற்சிக்கிறார்களென்றும் தொழிலாளர்கள் இவர்களுக்கு கைப்பொம்மைகளாக மாறுவது கேட்டையே விளைவிக்குமென்றும் கூறினார்.

திரு. சந்திரகாசன் பேசுகையில், தொழிற்சங்கங்கள் கட்டுப்பாட்டினாலும் நேர்மையினாலும் தான் வளருமென்றும் அமைதியைப்பாதுகாப்பது தொழிற்சங்கங்களின் கடமை என்றும் கூறினார்.

திரு ஆ. ஹென்றி பேசுகையில், எந்த ஒரு தொழிற்சங்கமும் குழப்பத்தை ஏற்படுத்தி முன்னேற்றமடைந்துவிட முடியாது என்றார்.

பல, மொழிவழித் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும் பேசினர்.

கூட்ட ஆரம்பத்தில் வட பகுதியின் பல பகுதிகளிலுமிருந்தும் மாட்டுவண்டில் ட்ருக்டர், டாக்ஸி, சைக்கிள் ஊர்வலங்கள் கூட்டமைதானத்தை வந்தடைந்தன.

---

### "புரட்சிகர . : .

(4-ம் பக்க தொடர்ச்சி)

தொழிலாளர்களைக் கொண்டு வேலைவாங்கும் இலங்கை முதலாளிகள் இன்று கொடியேற்றி மேதினம் கொண்டாடுவது தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்தக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது" என்றார், உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற கொள்கை பேசவேண்டியவர்கள் சிங்கள-பௌத்த தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று வகுப்புவாதம் பேசுவது தொழிலாளர்களைக் காட்டிக்கொடுப்பது போன்றதாகும்" என்று கூறினார்.

திரு. எம். சி. எம். சாபி பேசுகையில் "தொழிற்சங்கங்களுக்கிடையே அரசியல் கட்சிகளின் தொடர்பு இருக்கக்கூடாதென்று சட்டம் இயற்றப்போவதாகத் தேசிய அரசாங்கத்தின் மந்திரி ஒருவர் அறிவித்துள்ளார், தொழிற்சங்கங்களை உடைத்தெறியும் நோக்கத்துடன்தான் இதைச் செய்யவிருக்கிறார்கள். தொழிலாளர்கள் உஷாராக இருக்க வேண்டும்" என்றார்.

திருவாளர்கள் கிருஷ்ணகுட்டி, இராசா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

---

### நாற்சதுர அன்னுசி

சிட்னி, மே 2

ஆஸ்திரேலிய பழநிபுணர்கள், தங்களது ஐந்துவருட அயராத ஆராய்ச்சிகளின் பின்னர் நாற்சதுர அன்னுசிப் பழங்களை உற்பத்தி செய்துள்ளனர்.

இந்தப் பழங்களில் நிறையச் சாறு இருக்கிறதென்றும் கடினமாக இல்லையென்றும் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

---

### பிக்குகள் கைது

ரங்கூன், மே 2

பர்மிய பொலிஸார் நேற்று 33 பௌத்த பிக்குகளையும் ஐந்து பௌத்தர்களையும்கைது செய்தனர் நேற்று முன் தினம் வரை 180 பிக்குகளும் 77 பௌத்தர்களும் [illegible] பட்டுக் காவலில் [illegible] பட்டுள்ளனர்.

---

### வானொலி நிகழ்ச்சிகள்

**திங்கள் 3-5-65**

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசந்சிந்தனை, 6-55 கிறிஸ்தவசந்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 745 தேர்ந்தஇசை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைப் படஇசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — பஜனேஸ்வரி தில்லைநாதன், 7-15 பாட்டு — வி. ஜெயவீரசிங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நாள வாத்தியக்கச்சேரி, 9-30 தமிழ் முழக்கம், 9-45 நேயர் விருப்பம், 10-15 எங்கள் விருப்பம்.

---

# "மந்திரிப்பதவியை ஏற்க மறுத்தேன்"

## உடுப்பிட்டியில் திரு. ஜி. ஜி.

உடுப்பிட்டி, ஞாயிறு

"யாழ்ப்பாணத் தொகுதியிலும், உடுப்பிட்டித் தொகுதியிலும் கமதுடைய மகத்தான வெற்றிக்குக்காரணம் வாலிபர்களே. இந்த வெற்றியைப பொதுமக்களின் வெற்றியாகப் பாவித்து வாலிபரின் உதவியுடன் சமுதாய நன்மைகளை ஏற்படுத்தவேண்டும். தமிழினத்தின் உரிமைகளைப் பெற வேண்டுமானால் ஐக்கியதேசியக் கட்சிக்குத்தான் ஆதரவு கொடுக்கவேண்டுமென்று 1948-ல் யு. என், பி.யுடன் ஒத்துழைத்தோம், சுகாதாரமந்திரிப் பதவி-உள்நாட்டு மந்திரிப் பதவிகளில் ஏதாவதொன்றை எனக்குத் தருவதாகப்பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கேட்ட போது நான் மறுத்துவிட்டேன். என்னை எவரும் பதவியைக்காட்டி விலைக்கு வாங்க முடியாது என்பதைத் தமிழினம உணரவேண்டும் என்பதற்காகவே இப் பதவிகளை மறுத்தேன். தமிழரசுக்கும் யு. என். பி க்குமிடையே இரகசிய ஒப்பந்தம் உள்ளது என்று இங்கே கூறிவருபவர்கள் சமீபத்தில் பாராளுமன்றத்தில் அவ்வித ஒப்பந்தம் எதுவுமில்லையென்று தெரிவித்துள்ளனர்."

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி எம. பி. யும் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேதினத்திலன்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திற்கு அல்வாய் தமிழ்காங்கிரஸ வாலிபமுன்னணியின் சார்பில் அல்வை மாலிசந்திப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடாத்திய வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார், அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நேற்றைய செனட்சபை விவாதத்தின்போது தனிச்சிங்களச் சட்டத்தைத தாம் ஏற்றுக்கொள்வதாக அமைச்சர் திரு திருச்செல்வம் யார் சார்பாகக் கூறினார்? தமது குடும்பத்தின் சார்பாகவா? என்று திரு. பொன்னம்பலம் கேட்டார்

உடுப்பிட்டி எம், பீ, திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழரசும் தமிழ்க்காங்கிரசும் தேர்தலின் பின்னர் ஒற்றுமைப்பட்டிருந்தால் இப்போது கிடைப்பதைவிடப் பத்துவீதம் உரிமைகளைக் கூடுதலாகப் பெற்றிருப்போம். தனிச சிங்களச் சட்டத்தை மாற்றப போவதில்லையா? என்று பாராளுமன்றத்தில் பிரதமரைத் திரு. பீட்டர்கெனமனும், சிறிமாவோ பண்டார நாயக்காவும் வற்புறுத்தியும் பயமுறுத்தியும் கேட்டபோதும் அதுபற்றிக்கூறித் தற்போதைய சுமூகமான சூழ்நிலையை திரு. டட்லிசேனநாயக்கா கெடுக்கவிரும்பாத போதும் தமிழ் மக்களின் சார்பில் மந்திரிப்பதவி வகிக்கும் திரு. திருச்செல்வம் தனிச்சிங்களச் சட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்யப் போவதில்லை என்று கூறியுள்ளார். தேசிய அரசாங்கம் தனது வாக்குறுதிப்படி நடக்காவிட்டால் அதனுடைய ஆளாகப் போக்கிற்கே மாபெரும் ஆபத்து விளையும்.

சூழ்நிலையைச் சரியாகப் பயன்படுத்துவதற்குத் தமிழரசுக்கட்சியினரும் நாமும் ஒற்றுமைப் படவேண்டும். தமிழரசுக்கட்சியினர் நம்முடன் ஒற்றுமைப் படாவிட்டாலும் தமிழினத்திற்காக நாம் தனித்தாவது பாராளுமன்றத்திற்கு உள்ளும்வெளியேயும் போராடியே தீருவோம் [illegible] பற்றி [illegible] தலைவர் திரு. ஜி

ஜி பொன்னம்பலமும் பாராளுமன்றத்தில் முதன்முதலாக ஆராய்ந்து இதற்கென ஒரு குழுவையும் அமைக்கப்பாடுபட்டோம், கருப்பநீர் சட்டத்தைத் திருத்தியமைப்பது சம்பந்தமாக வருகிற புதன்கிழமை உள்நாட்டமைச்சர் வடமாகாணத்தின் சகல எம். பி.க்களையும் கூட்டி மகாநாடு நடாத்தவிருக்கிறார்.

உடுவில் தொகுதி தமிழ்காங்கிரஸ பிரமுகர் திரு எஸ். சிவனேசன் பேசுகையில், தமிழினத்தின் பிரச்சனை ஓர் தேசிய பிரச்சனை. இது அகில இலங்கை ரீதிப்படியே தீர்க்கப்படவேண்டும் என்றார்

வழக்கறிஞர் திருஎஸ். ஸ்ரீதரன் பேசுகையில், "ஒற்றையாட்சி திட்டத்தில் மனித அடிப்படை உரிமைச்சாதனம் சேர்க்கப்படவேண்டும் என்றார்.

திருவாளர்கள் க ஸ்ரீபாஸ்கரன், பரிஸ்டர் எம். சிவானந்தன், கவிஞர் செல்லையா.செ. கணேசமூர்த்தி சுப்பிரமணியம் ஆகியோருட்பட பலர் பேசினர், கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு சிவபாதசுந்தரம் தலைமை வகித்தார். ஆரம்பத்தில அல்வை முத்துமாரி அம்மன் சோலையிலிருந்து திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், ஜி. ஜி பொன்னம்பலம் ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

---

### வரவேற்பு

பருத்தித்துறை, ஞாயிறு

இம்மாதம் எட்டாம் திகதியன்று ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்துக்கு பெரும் வரவேற்பளிக்க பருத்தித்துறையில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

---



**விற்பனைக்கு**

பரப்பு: 1 1/2. No: 13/18, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். விபரங்களுக்கு: விளம்பர இல: 217. ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 217

**தேவை**

ஹோட்டலில் திறமையாகக் கடமையாற்ற சமையற்காரரும், வெயிட்டர்களும் தேவை. மேல்நாட்டு உணவு தயாரிப்பதில் நன்கு தேர்ச்சியுள்ளோர் மட்டுமே விண்ணப்பிக்கவும். பாம்கோர்ட், 202, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 227

இயந்திர உறுப்புக்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைக்கு முன் அனுபவமுள்ளவர்கள் தேவை நேர்முகமாகச் சமூகம்தரவும். இரண்டாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரையும் 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் கடைச்சல் மெசின் வேலை தெரிந்தவர்கள். பீல்ட் கன்வசர்கள், அப்றண்டிஸ் முறையே பிணைப்பணம்: 2500, 1000, 500. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள் மூலம் பொறுப்புத்தகுதி கொடுக்கவேண்டும் தபால்மூலம் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. என். எஸ். கனகரத்தினம் வட்டுக்கோட்டை எம். பி வீட்டுக்கு அருகாமையில், மூளாய், சுளிபுரம். 225

1-ம் திகதி தொடங்கி 15-ம் திகதி வரைக்கும் சென், ஜோன்ஸ் கலாசாலையில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சி விளம்பரகூடத்தில் வேலைசெய்வதற்கு திறமையான பெண்கள் தேவை. நேரில் வரவும். [illegible] 8, [illegible] பாணம். 96

**S. R. S.**

எமது சொந்த கைத்தறியில் தயார் செய்யப்பட்ட

★ சேலைகள்

★ பெட்சீட்டுகள்

★ துவாய்கள்

முதலியன விற்பனைக்கிருக்கிறது. உங்கள் தேவைகளுக்கு உடனே விஜயஞ்செய்யுங்கள்!

எஸ். ஆர். செல்லத்துரை

316, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 296.

**விற்பனைக்கு**

வீட்டில் இருக்கின்ற வரவேற்கும் அறையிலுள்ள தளபாடங்கள், 8 பொருட்கள், பர்மா தேக்கினால் செய்யப்பட்டவை, ஆறுபேர் இருந்து சாப்பிடக்கூடிய மேசையும், 6 கதிரைகளும் தேக்கினால் செய்யப்பட்டது. 7 வால்வ்ஸ் உள்ள ஒரு ஜேர்மனி வானொலிப்பெட்டி, கிடைக்குமிடம்: ஜோசப்பிள்ளை, 43, கண்டி றோட், யாழ்ப்பாணம். 221

**மனேஜர் தேவை**

கோண்டாவில் ப. நோ. கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. தகமை SSC தராதரத்துடன் கூட்டுறவுப் பயிற்சியும் விரும்பத்தக்கது. வயது 35க்குட்பட்டவர்கள் சமீபத்தில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்களுடன் 15-5-65-க்கு முன் பதிவுத் தபால்மூலம் விண்ணப்பிக்கலாம். பிணை ரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூபா 2000/- சம்பளம் மாசம் ரூபா 100/- ஆரம்பம். முகவரி: க. பொன்னம்பலம், கௌரவ காரியதரிசி, கோண்டாவில் ப. நோ. கூ. சங்கம், கோண்டாவில். 232

**கல்வி நிலையம்**

பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன (1) கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்புக்குரிய எல்லாப் பாடங்களும், (2) உயர்தரவகுப்புக்குரிய எல்லாப் பாடங்களும், (3) வர்த்தகக் கல்விக்குரிய பாடங்கள், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகக்கணிதம், (4) லண்டன் தேர்வுகளான பரீட்சை: சமஸ்கிருதம், தமிழ், பொருளியல், இந்திய சரித்திரம், ஐரோப்பிய சரித்திரம். (5) மொழிக்கல்வி: தமிழ், சமஸ்கிருதம், பாளி, ஆங்கிலம், சிங்களம். தனித்தனியாகவும் கற்க வசதியளிக்கப்படும். வேறு பாடசாலைகளிற் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு மாலையிலும், மற்றையோருக்கு காலையிலும் வகுப்புகள் நடாத்தப்படும். பெண்பிள்ளைகளுக்கும் விடுதி வசதி உண்டு. 45, மூலனும் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 232

**வகுப்புகள்**

பி. ஏ., ஜி. ஏ. கியூ., ஜி. சி. இ. உயர்தரம், ஜி. சி. இ. சாதாரணம், ஜி. சி. இ. முதல் வருடம். ஆங்கிலம் / தமிழ் சுருக்கெழுத்து, தட்டியல், வர்த்தகம், கணக்கியல்; சிங்களம்; ஆங்கிலம், அட்சர கேத்திர கணிதம், பௌதீகம், இரசாயனம், உயிரியல் முதலியன வற்றிற்கு விசேஷமாக வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யினிட்டெட் டியுட்டரீஸ். செல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 201

# மேதின கூட்டங்களில் குழப்பங்கள்

# கொழும்பில் மூவர் கைது; யாழ்ப்பாணத்தில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று நாடெங்கிலும் மேதினக் கொண்டாட்டம், ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்கள் என்றவகையில் கொண்டாடப்பட்டது. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற மேதின விழாக்களில் குழப்பங்கள் ஏற்பட்டன.

கொழும்பில் டார்லி ரோட்டுக்கும், யூனியன் பிளேஸிற்குமிடையே உள்ள பகுதியில் ஒருசாராரின் ஊர்வலத்தின்போது ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து அங்கு பொலிஸ் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருவதாக எமது கொழும்பு நிருபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற குழப்பத்தில் கல்வீச்சினால் நால்வர் காயமுற்றனர்.

கொழும்பு, சனி

சுதந்திரக்கட்சி சமசமாஜ கம்யூனிஸ்ட்கூட்டணியினர் சார்பாக சுதந்திர சதுக்கத்தில் மேதின விழா நடைபெற்றது. இவ்விழாவுக்கு சென்ற ஊர்வலம் டார்லி வீதியை அடைந்த பொழுது ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து பல வர்த்தக, தொழில் ஸ்தாபனங்களின் கட்டிட கண்ணாடிகள் தூள் தூளாக உடைக்கப்பட்டன. ஆயுதந்தாங்கிய பொலிசார் வந்து அமைதியை நிலைநாட்டினர். மூவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இம்மேதினக்கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் மே தினம்

## இரு பகுதியினரிடையே மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் மேதினம் கொண்டாடிய இரு தரப்பினருக்கிடையில் நடைபெற்ற கல்வீச்சில் நால்வர் காயமடைந்தனர். நால்வரும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சையளிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகரின் மத்தியிலுள்ள பழைய பஸ் நிலையத்தில் லங்காசமசமாஜக் கட்சி - கம்யூனிஸ்ட் கட்சி கூட்டுமுன்னணி சார்பில் மேதினக்கூட்டம்நடைபெற்றுக்கொண்டிருந்தது. அச்சமயம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்துக்கு முன்னால் நடைபெற்றுக்கொண்டிருந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்க மேதினக் கூட்டத்துக்கு தமிழரசுக் கட்சி ஆதரவிலுள்ள தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களின் ஊர்வலமொன்று ஆஸ்பத்திரி வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்தது. ஊர்வலத்தினர் சுலோகங்கள் கோஷித்துக்கொண்டு சென்றனர். பஸ்நிலையத்தில் நின்றவர்களும் சுலோகங்களைக் கோஷித்தனர். திடீரென்று கற்கள்வந்து விழத்தொடங்கின. ஊர்வலத்தில் சென்றவர்களும் வீதியோரங்களில்நின்று கூட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தவர்களும்வீதியில் சென்றுகொண்டிருந்தவர்களும் கல்வீச்சுக்குத் தப்புவதற்காக அங்குமிங்கும் சிதறி ஓடினர்.

நிலைமை மோசமாவதற்கு முன் பொலிசார் தக்கதருணத்தில் அங்கு அமைதியை நிலைநாட்டினர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டனர்.

வீதியோரங்களிலும் மாதிரிச்சந்தை கட்டுவதற்காகவும் குவிக்கப்பட்டிருந்த கற்கள்பல நடுவீதியில் காட்சியளித்தன!

நல்லூரிலும், கல்வியங்காட்டிலும் இரு பகுதியினர் ஊர்வலங்கள் தாக்கப்பட்டதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

## தமிழ் எம். பி. க்களுக்கு வில்மட் பெரேரா பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இந்த நாட்டில் தமிழ் சிங்கள மக்களின் நிரந்தரமான ஐக்கியத்தின்மேல் தான் ஒரு சுபீட்சமான ஐக்கியத்தை உருவாக்கமுடியும் என்பதை சிங்களச் சகோதரர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் ஒருசெய்தியாக விடுக்கவிரும்புகிறேன். கடந்த பலவருடங்களாக இதை வற்புறுத்தி வந்த நான் கடந்த தேர்தலின் போது மேலும் வலியுறுத்தி வந்தேன் என்று சென். ஜோன்ஸ் கல்லூரியில் மே பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் திரு.வில்மட்பெரேரா குறிப்பிட்டார்.

கல்லூரி பழைய மாணவர்சங்க தலைவர் திரு.எஸ். கனகரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. வில்மட் பெரேரா மேலும் குறிப்பிட்டதாவது:

நான் வற்புறுத்திவந்த விஷயம் வீண்போகவில்லை. தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தது விருப்பத்தக்கதே. இதை அமைக்கும் விஷயத்தில்வடக்கு, கிழக்கு மாகாண எம். பி. க்கள் புத்திசாலித்தனமாகநடந்து கொண்டதையிட்டு நான் அவர்களை மெச்சுகிறேன்.

சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைமீதுபேசுகையில் இடதுசாரிகள் தரக்குறைவான சொற்களைப்பாவித்தார்கள். சோஷலிசம் என்ற போர்வையில் வாயில்வந்ததெல்லாவற்றையும் பேசமுடியாது.பேசுவதும் செய்வதும் பொதுநலனைவிளைவிக்கக்கூடியதாக இருக்கவேண்டுமென்பதை இச் சந்தர்ப்பத்தில் இடதுசாரிகளுக்கு நான்நினைவூட்டவிரும்புகிறேன். நாட்டில் சகோதரத்துவம் ஓங்க வேண்டும் என்பதையும் தர்மவழியான ஆட்சி நடைபெறவேண்டுமென்பதையும் திரும்பவும்வலியுறுத்தவிரும்புகிறேன.

[illegible] மேதின விழா [illegible]

## "இறைச்சிக்கடைகளை மூடவேண்டும்"

மீசாலை, ஞாயிறு

"இறைச்சிக்காக பசுவை கொலைசெய்வது நாட்டின் தேகாரோக்கியத்தை கெடுப்பதுடன் கொடும் பாவத்தையும் தேடிக்கொள்கிறார்கள். இதைமுன்னிட்டு இச்சபை யாழ்பாண இறைச்சிக்கடைகளை பூட்டும்படியும் அல்லது அக்கடைகளை பஸ்நிலையத்தில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றும்படியும் அதற்கு பொறுப்பானவர்களை வேண்டிக் கொள்கின்றது" என்று மீசாலை இளம் விவசாயிகள் கழகத்தலைவர் டாக்டர் எஸ். வி. மூர்த்தி கழக பொதுக் கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் மீசாலை கிராமமுன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெற்றது. மேலும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது: அரசினர் ஆங்காங்கே மிருக வைத்தியர்களை தமது செலவில் நியமித்து கால்நடைகளை காப்பாற்றி வருகின்றனர். இறைச்சிக்கடைகள் இருப்பதன் காரணமாக இரவில் கிராமப்பக்கத்திலுள்ள கட்டாக்காலி மாடுகளை [illegible] பிடித்து இரவோடிரவாகக் கடத்திவிற்றும் விடுகின்றார்கள் இதனால் இதை நாம் தடுக்கவேண்டும்.

டாக்டர் எஸ். வி. மூர்த்தி கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. திருவாளர்கள் என். ஏரம்பமூர்த்தி, உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. க. பொ. கனகசபாபதி, இ. த. சுப்பிரமணியம் உட்பட பலர் பேசினர்.

## புதிய கிளை அங்குரார்ப்பணம்

சுழிபுரம், ஞாயிறு

இலங்கை தமிழ்அரசுக் கட்சியின் புதிய கிளையொன்று சுழிபுரம் மேற்கில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. சுழிபுரம், அம்பிகைபாகர் இல்லத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு பலர் சமூகம் கொடுத்தனர். கூட்டத்திற்குவட்டுக்கோட்டை எம். பி. திரு அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார். புதிய உத்தியோகஸ்தர் வருமாறு:-

தலைவர்: மு. தாமோதரம்பிள்ளை, உபதலைவர்: வே. அப்புக்குட்டி, காரியதரிசி: மா. மகாதேவன், உபகாரியதரிசி: சி. கந்தசாமி, தனாதிகாரி: அ. சிவனேசன், நிர்வாகசபை உறுப்பினர். ஆ. கதிரவேலு: மா, ஆறுமுகம், க. சுப்பையா, எம். புலேந்திரன், எஸ், வைத்தீஸ்வரன். சி. சின்னத்தம்பி.

## அபராதம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை தம்பிமுத்து, மாணிக்கக் இராமலிங்கம்என்பவர்களுடைய புகையிலைத் தோட்டத்தில் 1560 கிறைன் நிறையுள்ள 3 கஞ்சாச் செடி வல்வெட்டித்துறை பொலிசாரால் கைப்பற்றப்பட்டு பருத்தித்துறை மஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் முருகுப்பிள்ளை தம்பிமுத்து குற்றத்தை ஒப்புக்கொள்ள நீதிபதி 25 ரூபா அபராதம் விதித்தார். மாணிக்கம் இராமலிங்கம் விடுதலை செய்யப்பட்டார். வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜன்ட் வேலு வழக்கை நடத்தினர்.

யாழ். மாவட்ட

## பாட்மின்டன் இறுதிப் போட்டிமுடிவுகள்

### 'ஈழநாடு' வெள்ளிக் கிண்ணத்தை சேகரம் சுவீகரித்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாவட்டபாட்மின்டன் விளையாட்டுக்கழகம் நடத்திய சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் மாலை "கிளார் கல்லூரியில் நடைபெற்றன. இச்சுற்றுப்போட்டியில் "ஈழநாடு" வெற்றிக்கிண்ணத்தை திரு. என். பி. சேகரம் சுவீகரித்துக் கொண்டார். "ஈழநாடு" வெற்றிக்கிண்ணம் மாவட்ட ஆண்களுக்கு (தனி) வழங்கப்பட்டது.

மாவட்ட ஆண்கள் (இரட்டையர்) வீரர்களுக்கான "ஐடல்" ஜுன்டா நீஸ லிமிட்டெட்டின் வெள்ளிக்கிண்ணங்கள் திரு. ஆர். பி. நடராசா, திரு. என். பி. சேகரம் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. பெண்கள் (தனி) பிரிவுக்கான யூனியன் ஹோட்டல் கம்பெனியின் வெள்ளிக்கிண்ணம் செல்வி உமையாள் இரத்தினசிங்கத்துக்கு வழங்கப்பட்டது. ஆண்கள் விஷேபிரிவு (தனி) [illegible] யாழ். உரோகம் இன் டஸ்றீஸ் லிமிட்டெட்டின் வெள்ளிக்கிண்ணம் டி. எஸ் தம்பையாவுக்கு வழங்கப்பட்டது. ஆண்கள் (பொது-தனி) பிரிவுக்கான டாக்டர் கே. சோமசுந்தரத்தின் வெள்ளிக்கிண்ணம் எல் ஆர் ஆரியகந்தாவுக்குக் கிடைத்தது. மாவட்ட பெண்கள் (இரட்டையர்) பிரிவுக்கான செல்வி பி துரைசிங்கத்தின் வெள்ளிக்கிண்ணம் செல்வி பி எட்வேட்ஸுக்கும் திருமதி எச் எஸ ஜே பன்னம்பாலவுக்கும் வழங்கப்பட்டன.

திரு வி கணேசனின் "யாழ்ப்பாண வெள்ளிக்கிண்ணம்" அலெக்ஸ கே தம்பிராஜா வுக்கு வழங்கப்பட்டது.

#### மற்றைய வீரர்கள்

நேற்று முன்தினம் மாலை [illegible] ஏனைய வீரர் [illegible] 17 [illegible] ஆண்கள் (தனி வீரர்): டி எஸ தம்பையா. இரண்டாவது எஸ சுகுமார்.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் (தனி) வீராங்கனை: செல்வி யு இரத்தினசிங்கம், இரண்டாவது செல்வி எஸ ஞானசுந்தரம்.

மாவட்ட ஆண்கள் (தனி) என் பி சேகரம், இரண்டாவது என் சிவபாதன்.

மாவட்ட ஆண்கள் (இரட்டையர்) ஆர் பி நடராசா, என் பி சேகரம். இரண்டாவது எஸ சிவதாசன், என் சிவபாதம்.

மாவட்ட இரட்டையர்; ஆர் பி நடராசா, செல்வி புஷ்பதேவி எட்வேட்ஸ, இரண்டாவது என் பி சேகரம், திருமதி எச் எஸ ஜே பன்னம்பலாவ

மாவட்ட பெண்கள் (தனி) செல்வி யோகமலர்வின்ஸலோ இரண்டாவது: திருமதி எச், எஸ் .ஜே பன்னம்பலாவ.

மாவட்ட பெண்கள் இரட்டையர்: செல்வி பி எட்வேட்ஸ், திருமதி எச் எஸ ஜே பன்னம்பலா. இரண்டாவது: செல்வி [illegible] வின்ஸலோ, செல்வி யு இரத்தினசிங்கம்.

யாழ்ப்பாண வெற்றிக்கிண்ணம் (ஆண்கள் தனி): அலெக்ஸ, கே. தம்பிராஜா. இரண்டாவது: பி வி விக்னராஜா.

பொது ஆண்கள் (தனி): எல் ஆர் ஆரியகந்தா. இரண்டாவது: என் ராஜலிங்கம்.

பொது ஆண்கள் (இரட்டையர்): என் ராஜலிங்கம்; டபிள்யு சந்திரசேன இரண்டாவது: ரஞ்சித் டி சில்வா; கே விஜயேந்திரா.

பொது இரட்டையர். என் ராஜலிங்கம், செல்வி லக்சி தர்மசேன.

பொது பெண்கள் (தனி): செல்வி லக்சிதர்மசேன, திருமதி வி விஜயசிங்கா.

#### பாராட்டுக்குரியவர்கள்

கொழும்பிலிருந்து இங்கு வந்து விளையாடி, ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற எல். ஆர். ஆரியகந்தா தனது திறமையை இங் காட்டிவிட்டார் என்றுதான் சொல்லலாம். இலங்கையிலேயே, பாட்மின்டன் விளையாடுவதில் தனியாக ஒரு இடத்தைப்பிடித்தவர் இவர். இத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதை தெளிவாகக் காணக்கூடியதாகவிருந்தது. அவரின் "ஸ்மாஷ்" அடிகள் சிலசமயங்களில் உச்சக் கட்டத்தை அடைந்தது. ஒவ்வொரு "விளாசலுக்கும்", ரசிகர்களிடமிருந்து 'சபாஷ்' பெற்றுவிட்டார்.

#### ராஜலிங்கம்

அடுத்ததாக திரு. என். ராஜலிங்கம் முன் நிற்கிறார். இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பது அவருடைய விளையாட்டிலிருந்து தெரிய வருகிறது.

#### நடராஜா

திரு ஆர். பி. நடராஜாவினது சிறந்த விளையாட்டை இந்தச் சுற்றுப்போட்டியில் நாம் காணக்கூடியதாகவிருந்தது. இரட்டையர் விளையாட்டில் முன்னர் சாம்பியனாகவிருந்த திரு. நடராஜாவினது திறமையான விளையாட்டை கண்டவர்கள், அவரின் தகுதியை நன்றாகக் கணித்திருப்பார்கள். அவரது ஒவ்வொரு 'அடியும்' "நான் சளைத்தவரில்லை" — என்பதை உணர்த்தியது. யாழ்ப்பாணம் மாவட்ட பாட்மின்டன் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகப் பணிபுரியும் இவரின் திறமையினால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணம், பாட்மின்டன் துறையில் சிறந்து விளங்கும் என்பது எமது நம்பிக்கை.

## விளையாட்டு வீரருக்கு விருந்து

பாட்மின்டன் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் பொருட்டு இங்கு வந்திருந்த கொழும்பு விளையாட்டு வீரர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட பட்மின்டன் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. ஆர். பி. நடராசா நேற்றுமுன்தின மிரவு விருந்தொன்று அளித்து கௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org